பக்கங்கள்:-16

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஜப்பசி 08 | வெள்ளிக்கிழமை | 25.10.2024 | அதிர்வு 84

## ரயிலுடன் மோதி இளைஞர் மரணம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, ஏறாவூர் பிரதேசத்தில் ரயிலுடன் மோதி இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று 05▶

+ சமஷ்டி அரசமைப்பை முன்னெடுத்தல்

+ ஜெனிவாத் தீர்மானத்துக்கு இணங்குதல்

# தமிழரசுடன் அநுர உடன்பாடு உதய கம்மன்பில தெரிவிப்பு

## சுமந்திரனுக்கு வெளிவிவகார அமைச்சர் பதவியாம்



+ 2015 இல் ஆரம்பமான சமஷ்டி அரசமைப்பை இயற்றும் பணியை தொடர்ந்து முன்னெடுத்தல்.

+ ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 30ஃ1 தீர்மானத்திலிருந்து இலங்கை விலகி இருந்தாலும், அதனை மீள அமுல்படுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

- இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இந்த இரு நிபந்தனைகளுக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இணக்கம் தெரிவித்துள்ளார். எனவே, புதிய அரசில் தமிழரசுக் கட்சி இணையும். வெளிவிவகார அமைச்சராக எம்.ஏ.சுமந்திரன் நியமிக்கப்படவுள்ளார் என்று பிவிருது ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

இணைய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு கூறினார். 05▶

# மட்டக்களப்பு நீதிமன்றக் கட்டடத் தொகுதியை குண்டு வைத்துத் தகர்த்தப் போவதாக மிரட்டல்

## நேற்று இரவு வந்த தொலைபேசி அழைப்பையடுத்துப் பலத்த பாதுகாப்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நீதிமன்றக் கட்டடத் தொகுதியைக் குண்டு வைத்துத் தகர்த்தப் போவதாக நேற்று வியாழக்கிழமை இரவு வந்த தொலைபேசி அழைப்பையடுத்து அந்தப் பகுதியில் விசேட பாதுகாப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்த நீதிமன்றக் கட்டடத் தொகுதியைக் குண்டு வைத்துத் தகர்த்தப் போவதாக நீதிமன்றப் பதிவாளருக்குத் தொலைபேசி அழைப்பு ஒன்று நேற்று இரவு வந்ததையடுத்து உடனடியாகப் பொலிஸாருக்கு அவர் அறித்துள்ளார்

இதனையடுத்து நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்குப் பொலிஸ் உயர் அதிகாரிகள் சென்று பார்வையிட்டதுடன் கட்டடத்தைச் சுற்றிவர பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியில் விசேட பொலிஸ் ரோந்து 05▶






அறுகம்பே பகுதியில் இஸ்ரேலியப் பிரஜைகள் மீதான தாக்குதல் அச்சுறுத்தல் தொடர்பில் மூன்று சந்தேக நபர்கள் தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என வெளிவிவகார மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விஜித ஹேரத் நேற்றுத் தெரிவித்திருக்கிறார்.

இந்த விடயத்தை ஒட்டி மேலும் இருவர் கிழக்கு மாகாணத்தில் பின்னர் கைதாகி இருக்கின்றனர் என ஒரு தகவல் தெரிவித்தது. அவருடன் சேர்த்து இந்த விடயத்தில் கைதானவர்கள் எண்ணிக்கை ஐந்து என்று கூறப்படுகின்றது.

கடந்த இருபதாம் திகதி அதிகாலை யாழ் மாவட்டம் சுன்னாகம் பகுதியில் வைத்து 42 வயதுடைய தமிழர் ஒருவர் இந்த விவகாரத்தை ஒட்டியே பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் முதலில் கைதானார் என்று கூறப்படுகின்றது.

மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ் அலுவலக அதிகாரிகள் மேற்படி 05▶



# கைதான இரு வேட்பாளர்களும் பொலிஸ் பிணையில் விடுவிப்பு

(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

யாழ். வடமராட்சியில் கைது செய்யப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் அக்கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் தமிழ் மக்கள் கூட்டணியின் யாழ். மாவட்ட வேட்பாளர் வரதராஜன் பார்த்தீபன் ஆகியோர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

நெல்லியடியில் நேற்றுப் பிற்பகல் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த வேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தேர்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

அதேவேளை, பருத்தித்துறையில் நேற்றுப் பிற்பகல் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த வேளை, தமிழ் மக்கள் கூட்டணியின் யாழ். மாவட்ட வேட்பாளர் வரதராஜன் பார்த்தீபன், தேர்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைது செய்யப்பட்ட இருவரையும் அந்தந்தப் பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், அவர்களிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்த பின்னர் பொலிஸ் பிணையில் நேற்று மாலை விடுவித்தனர்.

# தமிழர் விடுதலைக் கூட்டணியில் அனைவரும் அணி சேர வேண்டும்

## முன்னாள் எம்.பி. திலகராஜா கோரிக்கை

(கி.வசந்தன்)

"இழந்து நிற்கின்ற உரிமைகளைப் பெறுவதற்கு ஒன்றாகக் குரல் கொடுப்போம். அதற்கு ஆரம்பப் புள்ளியாக எமது பெருந்தலைவர்கள் உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணியைக் கையில் எடுப்போம்."

– இவ்வாறு முன்னாள் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளருமான மயில்வாகனம் திலகராஜா தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த காலங்களில் இந்த நாட்டில் இடம்பெற்று வந்த ஆட்சி முறைக்கு தலைமை வகித்த இரண்டு படரும் கொடிகள் முக்கியமானவை. அதாவது ஐக்கிய தேசியக் கட்சியின் ஆரம்பத்தில் தொடங்கி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாக பிரிந்து பின்னர் வெவ்வேறு வடிவங்களில் ஒரே கொடியில் பூத்த மலர்களாகத்தான் அந்த ஜனாதிபதிகள் இருந்துள்ளனர். அந்தக் கொடிகளுக்கு அவ்வப்போது துணை கொடுத்த செடியாக புறத்தே நின்று புதிய மலராக தற்போதைய ஜனாதிபதி கிடைத்திருக்கின்றார்.

இங்கு நடைபெற்று முடிந்த தேர்தல் நிறைவேற்று அதிகாரத்தை கொண்ட ஒரு தனிநபரை உருவாக்குவதற்கான தேர்தலே அன்றி இந்த நாட்டில் ஜனநாயகத்தை நிறுவுவதற்காக சட்டத் தீர்மானங்களை எடுக்கும் நாடாளுமன்ற அதிகாரம் வழங்கப்படவில்லை.

எனவே, ஒரு தூய நாடாளுமன்றத்தை உருவாக்க வேண்டிய தேவை எமக்கிருக்கின்றது. அடுத்த நாடாளுமன்றுக்காகத் தூய உறுப்பினர்களைத் தேடுகின்ற இந்த நாட்டில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக தூய அரசியலை நாட்டில் கொண்டு வரவேண்டும் என்று முன்னின்று உழைத்த நாங்கள் இன்று களம் இறங்கியிருக்கின்றோம்.

அதேபோல தூய அரசை அமைப்பதற்குத் தூய எதிர்க்கட்சியும் அவசியம். அதனை நிரப்புவதற்கு வடக்கு, கிழக்கு, மலையகப் பகுதிகளில் வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் சமூகம் உதயசூரியன் சின்னத்தை ஆதரிக்க வேண்டும். நாங்கள் இழந்து நிற்கின்ற உரிமைகளைப் பெறுவதற்கு ஒன்றாகக் குரல் கொடுப்போம். அதற்கு ஆரம்பப் புள்ளியாக எமது பெருந்தலைவர்கள் உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணியைக் கையில் எடுப்போம். எங்கும் ஒளி பரவட்டும்.



இதேவேளை, சங்கு சின்னம் எதற்காக உருவாக்கப்பட்டது என்ற விளக்கத்தை அவர்கள் சொல்ல வேண்டும். அவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும்போதும் எங்களோடு உரையாடப்படவில்லை. அந்தத் தேர்தலில் மாத்திரமே சங்கு சின்னம் பயன்படுத்தப்படும் அதன் பின்னர் பயன்படுத்தப்படாது என்று சொல்லப்பட்ட கருத்தும் எனக்கு நினைவில் உள்ளது. மீண்டும் அது பொதுத் தேர்தலில் பயன்படுத்தப்படுவது தொடர்பில் எந்தவொரு விளக்கமும் எமக்குத் தெரியாது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வரலாறு, சங்கு கூட்டணியில் இருக்கும் தலைவர்களுக்கு தெரியாதது அல்ல. எனவே, எந்த இடத்திலிருந்து எந்தப் புள்ளியை ஆரம்பிப்பது என்ற கருத்து நிலை தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். ஆனால், அவர்களும் இந்தக் கூட்டணிக்கு வரலாம். நாங்கள் அனைவரும் இணைந்து ஒரு புதிய கூட்டணி பற்றி சிந்திக்கலாம்.

இலங்கை தற்போது சுதந்திரமடைந்தது போன்ற புதிய நிறைவேற்று அதிகாரத்தைக் கண்டுள்ள காலகட்டத்தில் நாங்கள் புதிய இலங்கையைப் பார்ப்பதற்கு புதிய நாளைத் தொடங்க வேண்டும். அதற்கு உதயசூரியன் பொருத்தமான சின்னம் என நினைக்கின்றேன். அதனைச் சங்கு ஊதி நிறுத்த வேண்டாம் என்றும் வேண்டுகின்றேன்." – என்றார்

### தேசியத்தை நம்பியவர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர்

# மாற்றத்துக்காக ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட நாம் தயார்

## ஸ்ரீ ரெலோ கட்சியின் செயலாளர் உதயராசா தெரிவிப்பு

(கி.வசந்தன்)

"தமிழ்த் தேசியத்தை நம்பியவர்கள் ஏமாற்றப்பட்டு தேசியமா, அபிவிருத்தியா என்ற இரட்டை நிலைப்பாட்டில் உள்ளதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. நாட்டில் மாற்றம் ஒன்று ஏற்படுமாக இருந்தால் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுவதற்குத் தயாராக இருக்கின்றோம்."

– இவ்வாறு ஸ்ரீரெலோ கட்சியின் பொதுச்செயலாளரும் ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளருமன ப.உதயராசா தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமது கட்சியின் வன்னி மாவட்ட வேட்புமனு நிராகரிக்கப்பட்டு சட்டப் போராட்டத்தின் பின் இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்றோம். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் ஒரு மாற்றத்தை உருவாக்கி மூன்றாம் தரப்பைச் சேர்ந்த ஒருவர் வெற்றி பெற்றுள்ளார். அந்தவகையில் நாட்டில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும் என்ற நோக்கில் எந்தக் கட்சியுடனும் இணைந்து போட்டியிடுவதில்லை என்ற நிலைப்பாட்டில் அவர்கள் உள்ளனர்.

குறிப்பாக ஊழல் அற்ற ஒரு ஆட்சியை உருவாக்கும் நோக்குடன் கடந்த காலங்களில் அரசுடன் செயற்பட்ட அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசில் இணைக்கமாட்டோம் என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த தேர்தலில் சொற்ப வாக்குகளால் நான் தோல்வியடைந்திருந்தேன். அந்தவகையில் இம்முறை நாம் புதிய உறுப்பினர்களை இணைத்துக் கொண்டு தேர்தலில் போட்டியிடுகின்றோம். எனவே, இந்த நாட்டில் ஒரு மாற்றத்தை ஜனாதிபதி உருவாக்குவாரானால் அவருடன் இணைந்து செயற்படுவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம். மாறாக மீண்டும் ஒரு நெருக்கடி நிலை நாட்டில் ஏற்படுமாக இருந்தால்



அவர்களுக்கு எதிராகக் குரல் கொடுக்கவும் தயங்கமாட்டோம்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நாடு முழுவதும் ஒரு மாற்றத்தை உருவாக்க வேண்டும் என்று மக்கள் எண்ணுகின்றனர். அந்த அடிப்படையில் பலர் தேர்தலில் இருந்து ஒதுங்கியுள்ளனர். தமிழ்த் தேசிய உணர்வோடு நாங்கள் இந்தச் சின்னத்துக்கே வாக்களிக்க வேண்டும் என்று தொடர்ந்த மக்களின் நிலைப்பாடு அவர்களுக்குள் ஏற்பட்ட பிரிவுகளால் வாக்குகள் சிதறடிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, இம்முறை வன்னியில் பெரும்பான்மை ஆசனங்களை எந்தக் கட்சிகளும் எடுக்கக்கூடிய நிலைமை இல்லை.

அந்த அடிப்படையில் குறைந்த வாக்குகளை எடுத்தாலே ஓர் ஆசனம் எடுக்கக்கூடிய நிலை இருக்கின்றது. அந்த வகையில் நாம் கடந்த தேர்தலில் எடுத்த வாக்குகளைப் பெற்றாலே ஓர் ஆசனம் பெற்றுக்கொள்வோம்.

இருப்பினும் இம்முறை நாம் மக்கள் மத்தியில் செல்வாக்கு உள்ள வேட்பாளர்களை நிறுத்தியுள்ளோம். தமிழ்த் தேசியத்தை நம்பியவர்கள் ஏமாற்றப்பட்டு தேசியமா, அபிவிருத்தியா என்ற நிலைப்பாட்டில் இன்று உள்ளதைக் காணமுடிகின்றது.

அந்தவகையில் நாட்டில் அதிக இடங்களில் போட்டியிடும் மூன்றாவது கட்சியாக எமது கூட்டணி உள்ளது. இம்முறை நேரடியாகப் போட்டியிட்டு வெற்றி பெறுவோம். மாறாக தேசியபட்டியல் ஆசனம் எதனையும் பெற்றுக்கொள்ளும் எண்ணம் எமக்கு இல்லை." – என்றார்.

# பாதுகாப்பு குழுக்களின் பிரதானிகளை சந்தித்தார் பிரதமர் ஹரினி அமரசூரிய







பாதுகாப்புக் குழுக்களின் பிரதானி, இராணுவ தளபதி, கடற்படை தளபதி மற்றும் பிரதமருக் கிடையில் நேற்று சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பு பிரதமர் அலுவலகத்தில் இடம் பெற்றுள்ளது.

இதன்படி, பாதுகாப்புக் குழுக்களின் பிரதானி சவேந்திர சில்வா, இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் விகும் லியனகே, கடற்படை தளபதி வைஸ் எட்மிரல் பிரியந்த பெரேரா ஆகியோர் பிரதமரை சந்தித்தனர்.

புதிய பிரதமர் பதவியேற்ற பின்னர் பாதுகாப்பு பிரதானிகளைச் சந்தித்த முதற் சந்தர்ப்பம் இது வாகும்.



# கனேடிய உயர்ஸ்தானிகர் பிரதமரை சந்தித்தார்

இலங்கை மற்றும் கனடா இடையிலான இருதரப்பு உறவுகளைப் பேணுவதற்கான கனடாவின் உறுதிப்பாட்டை இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வால்ஷ் மீண்டும் வலியுறுத்தினார்.

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் மற்றும் பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய இடையில் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இந்த சந்திப்பு நடைபெற்றது.

இலங்கையின் சமூகப் பாதுகாப்பு முறைமையை வலுப்படுத்துதல், பெண்களின் தொழில்முயற்சியை ஊக்குவித்தல் மற்றும் நாட்டின் பொருளாதாரத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறையின் முக்கியத்துவம் உட்பட அபிவிருத்தியின் முக்கிய பகுதிகள் குறித்து இந்தக் கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டது.

நாட்டின் அபிவிருத்திக்கு கல்விக்கு முன்னுரிமை அளிக்க வேண்டியதன் அவசியத்தை பிரதமர் இதன்போது தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பின் போது கனேடிய உயர்ஸ்தானிகராலயத்தின் சிரேஷ்ட அதிகாரிகள், பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி உள்ளிட்ட பலர் பிரசன்னமாகியிருந்தனர்.

# இஸ்ரேலிய பிரஜைகள் அவசர நிலைமையை எதிர்நோக்கும் போது அறியப்படுத்துங்கள்





நாட்டில்தங்கியுள்ள இஸ்ரேலிய பிரஜைகள், ஏதேனும் அவசர நிலைமைகளை எதிர்நோக்கும் போது அது தொடர்பில் சுற்றுலா மற்றும் கடற்படைப்பிரிவிற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபருக்கு தெரியப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய சுற்றுலா மற்றும் கடற்படைப்பிரிவிற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மாஅதிபர் தமயந்த விஜய ஸ்ரீயின் 071 859 2651 எனும் இலக்கத்திற்கு தெரிவிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு அறிவிக்கப்படும் பட்சத்தில் அது தொடர்பில் ஆராயப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தகவல் வழங்குநரின் ஆளடையாளம் உறுதிப்படுத்தப்படுமென்பதால் அது தொடர்பில் ஒத்துழைப்புடன் செயற்படுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# வாக்களிக்கும் முறைமை பற்றி தெளிவுபடுத்தும் விழிப்புணர்வு

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில்போது செல்லுபடியற்ற வாக்குகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகமாக காணப்பட்டமை தொடர்பில் முதற்கட்டமாக, தபால் மூலம் வாக்களிக்கவுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு வாக்களிக்கும் முறைமை பற்றி – ஒவ்வொரு திணைக்களையும் சேர்ந்த பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவருக்கு தெளிவுபடுத்துதல் கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 3.15 மணிக்கு அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றுபவர்கள் அவர்களுடைய திணைக்களத்தில் கடமையாற்றுகின்ற ஏனைய உத்தியோகத்தர்களுக்கு வாக்களிக்கும் முறைமை தொடர்பில் தெளிவுபடுத்தல்களை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# ஓட்டோவும் வானும் நேருக்கு நேர் மோதி குடும்பஸ்தர் ஒருவர் பரிதாப உயிரிழப்பு

ஓட்டோவும் வானும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அநுராதபுரம் – புத்தளம் வீதியில் அந்தரவெவ, கலயாமன்சந்திக்கு அருகில் நேற்று வியாழக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஓட்டோவைச் செலுத்தி வந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான நொச்சியாகம, அடம்பனையைச் சேர்ந்த டி.சுமித் ரத்நாயக்க (வயது 47) என்பவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தனது மகள், மகன் மற்றும் மகளின் நண்பரை பாடசாலைக்கு அழைத்துச் சென்று கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் பாடசாலை



மாணவர்கள் மூவர் காயமடைந்துள்ளனர். அவர்கள் மூவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கைதான தமிழர் யாழ்ப்பாணத்தில் தடுத்து வைத்திருக்கின்றார் என கேள்விப்பட்டு அவரைப் பார்வையிடுவதற்காக பாதுகாப்புத் தரப்பினருடன் தொடர்பு கொண்டனர் என்றும், எனினும் அவர் நேற்றே கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டுவிட்டார் என்றும் யாழ் மனித உரிமைகள் அலுவலகத் தரப்புக்குப் பதிலளிக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

இதேசமயம் இலங்கையில் அமெரிக்கப் பிரஜைஞளுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதான அறிவிப்பை நேற்று முன்தினம் அமெரிக்கத் தூதரகம் வெளியிட்ட அதேசமயம், அன்று காலையில் இலங்கைக்கான அமெரிக்க தூதர் ஜூலி சங் அம்மையார் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தார். வடக்கு ஆளுநர் உட்பட சில தரப்புகளை அவர் சந்தித்தார் எனத் தெரிகிறது.

இந்தப் பாதுகாப்புச் சிக்கல் விவகாரங்களை ஒட்டி முதல் நபர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டு நேற்று வரை யாழ்ப்பாணத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயத்தில்தான், அமெரிக்கதூதுவரின் யாழ். விஜயமும் இடம்பெற்றிருக்கின்றது என்று சில வட்டாரங்கள் தொடர்புபடுத்தி தகவல் வெளியிட்டிருக்கின்றன.

இதே சமயம் கைது செய்யப்பட்ட அந்த நபருக்கு வன்னியில் தேர்தலில் போட்டியிடும் ஒரு பிரமுகருடன் தொடர்பு இருப்பதாகவும், இந்த நபரும் அந்தப் பிரமுகரும் தென்னிலங்கைச் சிறைகளில் ஒரே சமயத்தில் காவலில் இருந்த போது ஒருவருக்கொருவர் அறிமுகமானவர்கள் என்றும் ஒரு தகவல் தெரிவிக்கின்றது.

அது பற்றிய விடயங்களும் புலனாய்வில் இருப்பதால் அது குறித்து அதிகம் பிரஸ்தாபிக்காமல் விட்டுவிடுவோம்.

## தமிழரசுடன் அநுர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

"நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் அமையவுள்ள புதிய அரசில் வெளிவிவகார அமைச்சுப் பதவி, ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரனுக்கு வழங்கப்படவுள்ளது என எனக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு பின்னர் இலங்கைத் தமிழரசுக் கட்சி தமது அரசுடன் இணையுமென ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். எனக்குக் கிடைத்த தகவலைத்தான் வெளிப்படுத்துகின்றேன். இதற்கு சான்று இல்லை. நான் பிழையெனில் அதனை ஜனாதிபதி சரி செய்யலாம்.

தேர்தலின் பின்னர் தமிழரசுக் கட்சி அரசுடன் இணையும், சுமந்திரனுக்கு வெளிவிவகார அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளது என்பதுதான் எனக்குக் கிடைத்துள்ள தகவல். இதற்காக இரு நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவை இரண்டுக்கும் ஜனாதிபதி உடன்பட்டுள்ளார். இவ்வாறு இணக்கம் தெரிவிக்கவில்லையெனில் அதனையும் ஜனாதிபதி மறுக்கலாம்.

2015 இல் ஆரம்பமான சமஷ்டி அரசமைப்பு பணியை முன்னோக்கி கொண்டு செல்லுதல் என்பது முதலாவது நிபந்தனை.

2015 இல் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தை அமுல்படுத்தல் என்பது இரண்டாவது நிபந்தனை.

இவற்றுக்கு ஜனாதிபதி உடன்பட்டுள்ளார். இதற்கு என்னிடம் சாட்சி இல்லை. தகவல்களை வெளிப்படுத்துகின்றேன். இல்லையெனில் ஜனாதிபதி அது பற்றி தெளிவுபடுத்தலாம். உண்மையை நாட்டு மக்களுக்குக் கூறும் பொறுப்பு ஜனாதிபதிக்கு உள்ளது.

சுமந்திரன் வெளிவிவகார அமைச்சராவது பிரச்சினை அல்ல, அதற்காக விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள்தான் பிரச்சினை." – என்றார்.

## ரயிலுடன் மோதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயில், ஏறாவூர் குடியிருப்புப் பகுதியால் செல்லும் போது இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஏறாவூர் காட்டு மாமரப் பகுதியைச் சேர்ந்த முஜாகித் எனும் இளைஞரே ரயிலுடன் மோதி மரணமடைந்துள்ளார்.

மேற்படி இளைஞரின் சடலம் ஏறாவூர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## மட்டக்களப்பு நீதிமன்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதுடன் புலனாய்வாளர்களும் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் இந்தப் பகுதியில் விசேட அதிரடிப் படையினர் பாதுகாப்பில் ஈடுபடவுள்ளனர்.

# ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் செலவு அறிக்கைகளை பகிரங்கப்படுத்த தீர்மானம்




ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்த தேர்தல் செலவு அறிக்கைகளை பகிரங்கப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களின் தேர்தல் செலவு அறிக்கைகளை தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தள பக்கத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வேட்பாளர்களின் தேர்தல் செலவு அறிக்கை குறித்து பொதுமக்கள் தமது கருத்துகள் மற்றும் முறைப்பாடுகளை முன்வைக்க முடியும் என தேர்தல் ஆணைக்குழு கூறியுள்ளது.

# சுய தொழில் வாய்ப்புகளை விரிவுபடுத்த இரத்தினக்கல் அதிகார சபை நடவடிக்கை

இரத்தினக்கற்களுடன் தொடர்புடைய சுய தொழில் வாய்ப்புகளை விரிவுபடுத்த தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

மாணிக்கக்கல் மெருகூட்டல், மாணிக்கக்கல் வெட்டுதல் போன்ற பணிகளுக்கு இளைஞர்கள் வழிநடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



# முட்டையின் விலை குறையும் சாத்தியம்



முட்டையின் விலை குறித்து மக்கள் மத்தியில் அதிருப்தி நிலவி வந்த நிலையில், ஒரு முட்டையை 41 ரூபாவுக்கும் குறைவான சில்லறை விலையில் விற்பனை செய்யும் வகையில் முட்டைகளைச் சந்தைக்கு விநியோகிப்பதற்கு முட்டை உற்பத்தியாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

முட்டை உற்பத்தியாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் வர்த்தக அமைச்சில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் பாதே அவர்கள் இந்த இணக்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர் என நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ஹேமந்த சமரகோன் தெரிவித்துள்ளார்.

வர்த்தகமற்றும்உணவுப்பாதுகாப்புஅமைச்சின்செயலாளர் எம்.எம்.நைமுதீன் தலைமையில் கலந்துரையாடல் இடம் பெற்றது.

இந்த விசேட கலந்துரையாடலில் கலந்து கொண்ட அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க, தற்போது சந்தையில் 45 ரூபாவிற்கும் குறைவான சில்லறை விலையில் முட்டையொன்று கொள்வனவு செய்யப்படுவதாகத் தெரிவித்தார்.

தற்போது நாளொன்றுக்கு முட்டை உற்பத்தி 85,000 ஆக அதிகரித்துள்ளதாகவும், மொத்த விலையில் 35 மற்றும் 36 ரூபாவிற்கு ஒரு முட்டை பண்ணையிலிருந்து விடுவிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நொச்சியாகம விபத்தில் ஒருவர் உயிரிழப்பு



நொச்சியாகம – அந்தரவெவ பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முச்சக்கர வண்டியும் வானும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

சம்பவத்தில் முச்சக்கர வண்டியின் சாரதியே உயிரிழந்துள்ளார்.

விபத்தில் காயமடைந்த சாரதியின் மகள் உள்ளிட்ட மூவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



# அச்சமின்றி நாட்டிற்கு சுற்றுலா மேற்கொள்ளுமாறு வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு அழைப்பு

எதிர்வரும் சுற்றுலா காலப்பகுதியில் அச்சமின்றி இலங்கைக்கு சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளுமாறு சுற்றுலா ஊக்குவிப்பு பிரிவால் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு பகிரங்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளுக்கு அதிகபட்ச பாதுகாப்பை வழங்க பாதுகாப்பு அமைச்சினால் வலுவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது நாட்டில் தங்கியுள்ள சுற்றுலாப் பயணிகளின் உளநலம் மற்றும் பாதுகாப்பிற்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என்பதை உறுதிப்படுத்த முடியும் என சுற்றுலா ஊக்குவிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

பிரபல சுற்றுலாத்தலமான அறுகம்பை பகுதியை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்படலாம் என்ற நம்பத்தகுந்த தகவல் கிடைத்துள்ளதாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்று முன்தினம் முற்பகல் விடுத்த பாதுகாப்பு ஆலோசனையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த பாரதூரமான அபாய நிலையை கருத்திற்கொண்டு தமது தூதரகத்தின் பணிக்குழாம் உறுப்பினர்கள் உடன் அமுலுக்கு வரும் வகையில் அறுகம்பை பகுதிக்கு செல்ல கட்டுப்பாடு விதிக்கப்பட்டதாக அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மறு அறிவித்தல் வரை குறித்த பகுதியில் சுற்றுலா மேற்கொள்வதை தவிர்த்துக்கொள்ளுமாறும் அமெரிக்க தூதரகம், அமெரிக்க பிரஜைகளிடம் வேண்டுகோள் விடுத்தது.

இதேவேளை, அமெரிக்க தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசனையை மேற்கோள்காட்டி இஸ்ரேலின் தேசிய பாதுகாப்பு பேரவையும் தமது பிரஜைகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

# விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஆரம்பம்



நேற்று முதல் 3 நாள்களுக்கு விசேட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரத்தில் நிலவிய மழையுடனான வானிலை காரணமாக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொழும்பு, களுத்துறை, கம்பஹா மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களின் டெங்கு அபாய வலயங்களில் இவ்வாறு டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

டெங்கு அபாயம் அதிகம் காணப்படும் 22 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

மத வழிபாட்டு தலங்கள், பாடசாலைகள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், தொழிற்சாலைகளுக்கு முன்னுரிமை அளித்து குறித்த டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படும் என தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.

டெங்கு ஒழிப்புப்பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள அண்மைய தரவுகளின்படி, வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளனர்.

அத்துடன், ஆண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் நாட்டில் 40,958 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சிறை அடாவடிக்கு நியாயம்

சட்டம் - ஒழுங்கு, நீதியை நிலை நிறுத்தி, நடைமுறைப்படுத்தும் விடயங்களில் ஒரு நேர் சீரான போக்கு மெல்ல மெல்லத் தென்படத் தொடங்குகின்றது.

ஆட்சித் தரப்பும் நீதித்துறையும் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான முன் முயற்சிகளில் ஈடுபட்டிருப்பது இப்போது வெளிப்படையாகத் தெரிகிறது.

இந்தப் பின்புலத்தில்தான் முன்னாள் சிறைத்துறை அமைச்சர் லொஹான் ரத்வத்தைக்கு எதிரான குற்றவியல் வழக்கு இப்போது நீதிமன்றத்திற்கு வந்திருக்கின்றது.

பொதுவாக வழக்குகள் நீதிமன்றத்தில் இருக்கும் போது அவை பற்றி செய்திகள் வெளியிடுவது, விமரிசனம் செய்வது, கையாள்வதில் மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

லொஹான் ரத்வத்தைக்கு எதிரான வழக்கு சாதாரண கிரிமினல் குற்ற வழக்காக இருந்தாலும் கூட அதில் இனரீதியான அணுகுமுறை தொடர்பான பல விடயங்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. தமிழ் அரசியல் கைதிகள் அதிகாரத்திலும் பதவியிலும் உள்ள அரசியல்வாதியால் சிறைக்குக்குள் வைத்து இன ரீதியாகக் கொலை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டனர் என்பதுதான் வழக்கின் சாரம். அந்தக் குற்றவியல் வழக்கை அமைச்சராக இருந்த லொஹான் ரத்வத்தைக்கு எதிராக அரசே - சட்டமா அதிபரே - தொடுத்திருக்கின்றமையால் இது ஒரு முக்கிய விடயமாகக் கருதப்பட வேண்டி உள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகள் பத்துப் பேரை அச்சுறுத்தி, முழங்காலிட வைத்து, அவர்கள் தலையில் துப்பாக்கி வைத்து மிரட்டினார் எனத் தெரிவிக்கப்படும் சம்பவம் தொடர்பான வழக்கை எதிர்வரும் ஜனவரி 30 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றம் முடிவு செய்திருக்கின்றது.

இதே விடயத்தை ஒட்டி லொஹான் ரத்வத்தைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதுவும் இப்போது விசாரணைக்கான கட்டத்தை நெருங்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த விவகாரத்தை ஒட்டி நீதிவான் நீதிமன்றத்திலும் குற்றவியல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் வழிகாட்டியமையால் இப்போது அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தில் இந்த குற்ற வழக்கை நேரடியாக சட்டமா அதிபரே தொடுத்திருக்கின்றார் என்பது கவனிக்கத்தக்கதாகும்.

பத்துத் தமிழ் கைதிகளின் முன்னிலையில், அவர்களில் ஒருவரைத் துப்பாக்கியைத் தலையில் வைத்து கொலை செய்யப் போகிறார் என அச்சுறுத்திய குற்றச்சாட்டு எதிராளி மீது இந்த வழக்கில் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டால், தண்டனைச் சட்டக் கோவையின் 486 ஆவது பிரிவின்படி கொலை அச்சுறுத்தல் குற்றத்திற்கு ஏழு வருட சிறைத் தண்டனை விதிக்கப்படக்கூடும்.

ஏற்கனவே இந்த அச்சுறுத்தல் சம்பவம் தொடர்பாக சிறைத் துறை நடத்திய தனிப்பட்ட விசாரணையிலும், அதன் பின்னர் வந்த சிறைத் துறைகும் பொறுப்பான அமைச்சர் அலி சப்ரி நியமித்த சரோஜினி வீரவர்த்தன தனி நபர் குழு நடத்திய விசாரணையிலும் இத்தகைய சம்பவம் நடைபெற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

பத்து தமிழ் கைதிகளுக்கு முன்னால் நடைபெற்ற சம்பவம் என்பதால் இது குறித்த சாட்சியங்கள் நீதிவான் நீதிமன்றத்தில் தாராளமாக முன்வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நீதிவான் நீதிமன்றம், உயர்நீதிமன்றம்ஆகியஇரண்டிலும்இவ்விடயத்தை ஒட்டி லொஹான் ரத்வத்தை நெருக்கடிகளை எதிர்கொள்வார் என்றே தோன்றுகின்றது.

இனவாத அடாவடித்தனங்களுக்கு எதிராகசட்டம்தன்கைவரிசையைச்சரியாகக் காட்டுவதற்கான ஒரு வாய்ப்பை இந்த வழக்கு இரண்டு நீதிமன்றங்களிலும் தரக் கூடும். பொறுத்திருந்து பார்ப்போம்.



## நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக

# பிரதேச செயலாளர்களுடனான முன்னாயத்த கலந்துரையாடல்

வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக பிரதேச செயலாளர்களுடனான முன்னாயத்த கலந்துரையாடல், யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று வியாழக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த தெரிவத்தாட்சி அலுவலர்,

“நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் செல்லுபடியற்ற வாக்குகள் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிகமாகவுள்ளதால், நாடாளுமன்றத் தேர்தல வாக்களிப்பு முறை பற்றிய விழிப்புணர்வுத் திட்டத்தை பிரதேச செயலக ரீதியாக மக்கள் மத்தியில் முன்னெடுக்கவுள்ளோம். அதற்குப் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதற்கு பிரதேச செயலகர்கள் ஒத்துழைப்பை நல்க வேண்டும்.” – என்றார்.

பிரதேச செயலக பிரிவு ரீதியாக தேர்தல்கள் முறைப்பாட்டு பிரிவுகளை பிரதேச செயலகங்களில் ஸ்தாபிப்பது தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் உதவித் தேர்தல் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் மற்றும் அனைத்துப் பிரதேச செயலாளர்களும் கலந்துகொண்டார்கள்.











# புதிய சாரணத் தலைவர்களுக்குச் சின்னம் சூட்டும் நிகழ்வு

(கி.வசந்தன்)

வவுனியா மாவட்டத்தின் புதிய சாரணத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு நடைபெற்றது.

வவுனியா மாவட்ட சாரணர் சங்கம் மற்றும் வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் சாரணத் தலைவர்களுக்கான கலைக்கூறு – 1 பயிற்சி நெறியைப் பூரணப்படுத்திய சாரணத் தலைவர்களுக்கான பயிற்சியும், அதனைத் தொடர்ந்து சின்னம் சூட்டும் நிகழ்வும் நேற்று வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பயிற்சித் தலைவரான ப.அஜித்குமார், உதவி பயிற்சித் தலைவர்களான ரா.வரதராஜா, அ.பிரியதர்சினி ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

இந்தப் பயிற்சியை எம்.சுதர்சினி, உதவி மாவட்ட ஆணையாளர் (பயிற்சி) ஒழுங்கமைத்திருந்தனர்.

வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன், வவுனியா சாரண சங்கத்தின் செயலாளர் ஆர். வீரசிங்க, வவுனியா மாவட்ட ஆணையாளர் யோ.கஜேந்திரன், உதவி மாவட்ட ஆணையாளர்களான



ஆர்.சந்திரமோகன், வி.பிரதீபன், எம்.சபேசன், ஏ.ஆருரன், இ.சற்சொரூபன், பி.பிரதிகா ஆகியோரும் இந்த நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர்.

இந்த நிகழ்வுக்கு வவுனியா தெற்கு கல்வி வலயம் அனுசரணை வழங்கியிருந்தது.











# இஸ்ரேலிய பிரஜைகளைத் தாக்க திட்டமிட்ட மூவரிடம் விசாரணை

## அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு



அறுகம்பே பகுதியில் இஸ்ரேலிய பிரஜைகள் மீதான தாக்குதல் அச்சுறுத்தல் தொடர்பில் தற்போது மூன்று சந்தேகநபர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கைதான மூவரும் இலங்கையர்கள் என்பதுடன், எந்தவொரு வெளிநாட்டவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

அத்துடன், சந்தேகநபர்கள் எவ்வாறான தாக்குதலை நடத்த திட்டமிட்டிருந்தார்கள் என்பது தொடர்பில் இதுவரை தெரியவரவில்லை.

சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

எனவே, பாதுகாப்பு தொடர்பில் எவ்வித அச்சங்களும் கொள்ளத் தேவையில்லை. சிலர் இந்த சம்பவத்தை அரசியலாக்க முற்படுகின்றனர். அவர்கள் நாடு தொடர்பில் முதலில் சிந்தித்து செயற்பட வேண்டும்.

இஸ்ரேலிய நாட்டு பிரஜைகளுக்கு இலங்கையில் ஆபத்து இருக்கிறது என்ற அடிப்படையில், அந்தநாட்டின் பாதுகாப்பு தரப்பினர் விசாரணைகளை நடத்தியதன் காரணமாக அவர்களுக்குஅதிகவிபரங்கள்கிடைக்கப்பெற்றிருக்கலாம்

இது பயங்கரவாத அல்லது ஒழுங்கமைக்கப்பட்ட குழுவொன்றினால் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படவிருந்த செயல் அல்ல.

அதேநேரம், ஏப்ரல்-21 தாக்குதலுக்கு சமமான தாக்குதல் அச்சுறுத்தலும் இல்லை.

இலங்கையில் மட்டுமின்றி, வேறு பல நாடுகளிலும் இஸ்ரேலியர்களை இலக்கு வைத்து தாக்குதல்கள் நடத்தப்படும் அபாயம் இருக்கிறது.

எவ்வாறாயினும் தற்போது சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் கூடும் பகுதிகளிலும், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

முப்படையினர் நாடு தழுவிய ரீதியில் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பில், கைது செய்யப்பட்டுள்ள மூன்று சந்தேக நபர்களிடமும் தொடர்ந்தும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அவர்களை எவரேனும் வழிநடத்தியிருந்தால், விசாரணையின் பின்னரே அதனை கூற முடியும்.

எனவே, பொதுமக்கள் இது குறித்து பீதியடைய வேண்டிய அவசியமில்லை.

அத்துடன், ஏதேனும் தாக்குதல்கள் தொடர்பான திட்டம் குறித்து பொதுமக்கள் தகவல்களை அறிந்திருந்தால் அது தொடர்பில் காவல்துறையின் 119 என்ற அவசர தொலைபேசி இலக்கம் அல்லது காவல்துறை தலைமையகத்திற்கு தகவல்களை வழங்க முடியும்."- என்றார்.




# பொதுத் தேர்தல் தொடர்பில் 600 முறைப்பாடுகள் பதிவு

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் இதுவரை 600 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 196 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 385 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதேவேளை,மாவட்டதேர்தல்முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 4 முறைப்பாடுகளும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 15 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.



# தேர்தல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணைகள் ஒத்திவைப்பு

நாடாளுமன்றத் தேர்தலை எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி நடத்துவது அரசியல் சாசனத்துக்கு எதிரானது என்று தீர்ப்பளிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை எதிர்வரும் 4 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனு நேற்று உச்ச நீதிமன்ற நீதியரசர் அர்ஜ/ன ஒபேசேகர முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனு தொடர்பில் ஆட்சேபனைகள் இருப்பின், அவற்றை இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் தாக்கல் செய்யுமாறு பிரதிவாதிகளுக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

சிவில் அமைப்பு செயற்பாட்டாளரும் “நாம் ஸ்ரீலங்கா தேசிய அமைப்பின் “ஒருங்கிணைப்பாளர் எச். எம். பிரியந்த ஹேரத்தினால் இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் சார்பில் சட்டமா அதிபர், ஜனாதிபதியின் செயலாளர், தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.



# நில்வலா ஆற்றின் தாழ்வான பகுதிகளில் வெள்ள அபாயம்

நில்வலா ஆற்றை சுற்றியுள்ள தாழ் நிலப்பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பஸ்கொட, கொட்டபொல, பிடபெத்தர, அக்குரஸ்ஸ, அத்துரலிய, மாலிம்பட, கம்புருபிட்டிய, திஹாகொட, மராட்டிய மற்றும் தேவனுவர செயலகப் பிரிவுகளுக்குட்பட்ட தாழ்நிலப் பகுதிகளுக்கே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நில்வலா ஆற்றின் மேல் மற்றும் நடுப்பகுதிகளில் கணிசமான மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# இன்று அதிகாலை கரையைக் கடக்கிறது டானா புயல்; அதி கனமழை எச்சரிக்கை



ஒடிசாவின் புரி மற்றும் மேற்கு வங்கத்தின் சாகர் தீவு இடையே இன்று அதிகாலை 'டானா' தீவிரப் புயல் கரை கடக்கிறது. ஒடிசா மற்றும் மேற்கு வங்க கடலோரப் பகுதிகளில் அதி கனமழை எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நேற்று முன்தினம் நிலை கொண்டிருந்த டானா புயல், வடக்கு – வடமேற்கு திசையில் நகர்ந்து, மத்திய மற்றும் அதனை ஒட்டிய வடமேற்கு வங்கக்கடல் பகுதிகளில், இரவு 11.30 மணி அளவில் தீவிர புயலாக வலுபெற்றது.

இது வடக்கு – வடமேற்கு திசையில் நகர்ந்து வடக்கு ஒடிசா மற்றும் மேற்கு வங்க கடற்கரை பகுதிகளில், பூரி – சாகர் தீவுகளுக்கு இடையே, பிதர் கனிகா மற்றும் தாமரா (ஒடிசா) அருகே மிகத்தீவிர புயலாக, இன்று அதிகாலை கரையை கடக்கக்கூடும். அச்சமயத்தில், அப்பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 100 முதல் 110 கிலோ மீற்றர் வேகத்திலும் இடையிடையே 120 கிலோ மீற்றர் வேகத்தில் வீசக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஒடிசா கடல் பகுதியை டானா புயல் நெருங்கியதால் பாரதீப் பகுதி, கேந்திர பாரா மாவட்டத்தின் ராஜ்நகர், பாலசூர், புரி ஆகிய பகுதிகளில் பலத்த காற்றுக்கு பல மரங்கள் சாய்ந்தன. குறிப்பாக, ஒடிசா கடலோரப் பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. இந்தப் புயல் கரையை கடக்கும்போது பத்ரக், பாலசூர், ஜஜ்பூர், கட்டாக், குர்தா, ஜகத்சிங்பூர், கேந்திரபடா மற்றும் புரி மாவட்டங்களில் பலத்த காற்றுடன் அதி கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

புயல் கரை கடந்தபின் மேற்கு மற்றும் தென் பகுதி நோக்கி திரும்பும் வாய்ப்புள்ளதால் தெற்கு ஒடிசா பகுதியில் நாளை வரை கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் ஒடிசா முதல்வர் மோகன் சரண் கூறுகையில்,

"டானா புயல் காரணமாக ஒடிசாவின் 3 கடலோர மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கும் வாய்ப்புள்ளது. 14 மாவட்டங்களில் இருந்து 10 லட்சம் பேரை வெளியேற்றி பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்துள்ளோம். அவர்களுக்கு உணவு உள்ளிட்ட பொருள்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

டானா புயலை எதிர்கொள் ஒடிசா அரசு தயார் நிலையில் உள்ளது. புயல் பாதிப்பை சமாளிக்க மாநில அமைச்சர்கள் பல்வேறு மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்." – என்றார்.





# இந்தியாவிலிருந்து இலங்கை நோக்கிப் பயணித்த விஸ்தாரா விமானத்திற்கு வெடிகுண்டு மிரட்டல்

இந்தியாவின் மும்பையிலிருந்து நேற்று பிற்பகல் புறப்பட்ட விஸ்தாரா விமானத்தில் வெடிகுண்டு இருப்பதாக வெளியான தகவலையடுத்து, அந்த விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டதுடன் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.




இந்தியாவின் மும்பையிலிருந்து விஸ்தாராஏர்லைன்ஸின்யு.கே.-131விமானம் நேற்று பிற்பகல் 02.56 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது.

யுசைடிரள யு-320 ரக விமானமான இந்த விமானத்தில் 108 பயணிகளும் 8 ஊழியர்களும் பயணித்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.




# பங்களாதேஷில் ஜனாதிபதியை பதவி விலகக்கோரி போராட்டம்

பங்களாதேஷ் அரசாங்கத்தின் பணி ஒதுக்கீடு முறைமைக்கு எதிராக மாணவர்களால் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதை அடுத்து பிரதமராக இருந்த ஷேக் ஹசீனாவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு, அவர் நாட்டை விட்டு வெளியேறி இருந்தார்.

பங்களாதேஷில் இருந்து இந்தியாவுக்கு அவர் தப்பிச் செல்லும் முன், தனது பிரதமர் பதவியை ஷேக் ஹசீனா இராஜினாமா செய்தார் என தகவல் வெளியானது.

ஆனால், ஷேக் ஹசீனா பிரதமர் பதவியை இராஜினாமா செய்ததற்கான ஆவணங்கள் தன்னிடம் இல்லை என பங்களாதேஷ் ஜனாதிபதி முகமது



ஷஹாபுதீன், கடந்த வாரம் பேட்டி ஒன்றில் கூறியதையடுத்து பங்களாதேஷ் முழுவதும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அவரின் கருத்தால் கொந்தளித்த மாணவர் அமைப்பினர், கடந்த செவ்வாய்க்கிழமை முதல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஜனாதிபதி மாளிகையை மாணவர்கள் முற்றுகையிட்டதால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

போராட்டம் நடத்திய மாணவர் அமைப்பினர் மீது இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் காயமடைந்தனர்.

அதன் பின்னர், பெரும் போராட்டத்துக்குப் பிறகு அங்கு நிலைமை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது.

இருப்பினும், முகமது ஷஹாபுதீனை ஜனாதிபதி பதவியிலிருந்து விலகுமாறு மாணவர் அமைப்பினர் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.





# தென்கொரியாவுக்கு குப்பை நிரப்பிய பலூன்களை அனுப்பிய வடகொரியா

தென்கொரியாவுக்கு குப்பை நிரப்பிய பலூன்களை வடகொரியா அனுப்பியுள்ளதாக வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடகொரியாவின் இந்த குப்பை பலூன்கள், தென்கொரியாவின் தலைநகர் சியோலில் உள்ள ஜனாதிபதி மாளிகை வளாகத்திற்குள் விழுந்துள்ளது.

உடனடியாக அந்த பலூன்களை பாதுகாப்புக்கு இருந்த ஊழியர்கள் கைப்பற்றினர். இந்த பலூன்களுக்குள் ஆபத்தான எதுவும் இல்லை எனவும் தென்கொரிய பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.




# இன்றைய ராசி பலன்கள் - 25.10.2024

## மேஷம்

இன்று அதிர்ஷ்டம் காணப்படும் நாள். திருப்திகரமான பலன்கள் கிடைக்கும் சாதகமான நாள். உங்கள் பெற்றோரின் ஆதரவு கிடைக்கும்.அது உங்களுக்கு மகிழ்ச்சிகரமாக இருக்கும்.

பணியில் உங்கள் நேர்மை மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும். சரியான நேரத்தில் பணிகளை முடிப்பது சக பணியாளர்களின் கவனத்தை ஈர்க்கும். உங்கள் பணியில் உங்கள் திறமை வெளிப்படும்.

உங்கள் துணையிடம் அன்பான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நம்பிக்கை ஏற்படும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும். இதனால் உங்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## ரிஷபம்

இன்று எதிர்பாராத வரவுகளும் வெற்றியும் கிடைக்கும் நாள். புத்திசாலித்தனத்தை பயன் படுத்துவதன் மூலம் அதிகம் சாதிக்கலாம்.

பணியில் உங்கள் செயல்திறன் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும். குறித்த நேரத்துக்கு முன்பே பணிகளை முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

நீங்கள் உங்கள் துணையிடம் சந்தோஷமான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலை சீராக இருக்கும். காப்பீடு அல்லது பூர்வீக சொத்து வகையில் பண வரவு கண்டு மகிழ்வீர்கள்.

உங்களின் ஆற்றல் மற்றும் திடமான மனநிலை காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மிதுனம்

இன்று கவனமாகக் கையாள வேண்டிய கடினமான சூழ்நிலைகள் காணப்படும். இசை கேட்பது மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது சில போராட்டங்களை சந்திப்பீர்கள். உங்கள் சக பணியாளர்கள் மூலம் சில பிரச்சினைகளை நீங்கள் சந்திப்பீர்கள். இதனால் அவர்களுடன் நல்லுறவு காணப்படாது.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள்.இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை அவ்வளவு திருப்திகரமாக காணப்படாது. தேவையற்ற செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

## கடகம்

இன்று திருப்திகரமான பலன்கள் கிடைக்காது. உங்கள் இலக்குகளை திட்டமிட்டு திறமையாக நடத்த வேண்டும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

பணிகள் கடோயாக யாருக்கும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாத நிலை இருக்கும். பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ளவும்.

மன நிலை மாற்றத்தால் பாதிப்பு ஏற்படும். இதனால் உங்கள் துணையுடன் நல்லுறவு காண இயலாது. உறவில் நல்லிணக்கம் காண அமைதியான போக்கை மேற்கொள்ள வேண்டும்.

கவனக் குறைவு மற்றும் அஜாக்கிரதை காரணமாக இன்று பண இழப்பு ஏற்படும். பணத்தை கையாளும் போது கவனம் தேவை.

இன்று சிறிது பதட்டம் காணப்படும்.

## சிம்மம்

இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் சாதகமான நாள். கடின உழைப்பு மற்றும் இடைவிடாத முயற்சி மூலம் லாபகரமான பலன்கள் கிடைக்கும். இது உங்கள் வளர்ச்சியை மேம்படுத்தும்.

நீங்கள் இன்று கடினமான பணிகளையும் எளிதாக மேற்கொள்வீர்கள். உங்கள் செயல்திறன் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

இன்று உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள். இதனால் உறவில் நல்ல புரிந்துணர்வு ஏற்படும். இருவரிடமும் மகிழ்ச்சி காணப்படும்.

இன்று பணம் சேர்ப்பதற்கானஅதிர்ஷ்ட நிலை உள்ளது. இதனால் உங்கள் சேமிப்பு உயரும். நீங்கள் சௌகரியமாக உணர்வீர்கள்.

இன்று உங்களின் மன உறுதி காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## கன்னி

இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி உங்கள் முயற்சிகளில் வெற்றி காணலாம். மொத்தத்தில் இன்று மகிழ்ச்சியான் நாள்.

பணி தொடர்பான பயணம் காணப்படுகின்றது. குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பதன் மூலம் உங்கள் திறமை வெளிப்படும்.

உங்களின் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். பயணம் காணப்படுகின்றது. இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

தொலை தூரத்திலிருந்து உங்களுக்கு வரும் பண வரவு வரப்பிரசாதமாக அமையும். எதிர்கால பாதுகாப்பிற்காக உபரிப் பணத்தை சேமிப்பீர்கள்.

உங்களின் நம்பிக்கையான மனநிலை காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## துலாம்

இன்று உங்கள் செயல்களில் கவனமாக இருக்க வேண்டும். சாதகமான பலன்கள் கிடைக்க கடினமான சூழ்நிலைகளை கவனமாக கையாள வேண்டும். இசை கேட்டல் மற்றும் தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் உங்கள் பணிகளை கவனமாக மேற்கொள்ள வேண்டும். உங்கள் பணிகளை மீண்டும் சரிபார்த்து செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

தகவல் தொடர்பில் காணப்படும் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடனான உறவில் பாதிப்பு ஏற்படும். உறவில் நல்லிணக்கம் காண இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும். அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

நிதியைப் பொறுத்தவரை எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. இன்று அதிக பணம் சம்பாதிக்க இயலாது.

## விருச்சிகம்

இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. நீங்கள் எளிதில் உணர்ச்சிவசப்படுவீர்கள். முடிவுகளை விரைந்து எடுப்பீர்கள். இதனால் பிரச்சினை ஏற்படுத்தும் சூழ்நிலை காணப்படும். உங்கள் உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்துவதன் மூலம் சிறந்த பலனைக் காணலாம்.

நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு சற்று கவலை ஏற்படுத்தும். சக பணியாளர்களிடமிருந்து சில தொல்லைகளை எதிர் கொள்ள நேரும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். நல்ல புரிந்துணர்விற்கு அனுசரணையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

தேவையற்ற செலவுகள் காரணமாக பணம் கரையும்.

# இன்றைய ராசி பலன்கள் - 25.10.2024




உங்கள் வளர்ச்சிக்கு உதவும் முயற்சிகளை எடுக்க இன்றைய நாள் சாதகமாக உள்ளது. உங்கள் இலக்குகள் நிறைவேறும். திருப்தியும் நல்ல உணர்வும் உங்களிடம் இன்று காணப்படும்.

புதிய வேலை வாய்ப்புகள் உங்களுக்கு திருப்தி அளிக்கும். சாதித்தது போன்ற உணர்வு உங்களிடம் காணப்படும். எனவே நீங்கள் சிறப்பாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவதற்கு உகந்த நாள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வும் மகிழ்ச்சி யும் வளரும்.

நிதி நிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். ஊக்கத் தொகை வகையில் பண வரவு ஏற்பட்டு பணம் சேர்க்க இயலும்.

நல்ல சுறுசுறுப்பு மற்றும் மனதிடம் காரணமாக இன்று உங்களிடம் ஆற்றல் நிரம்பி இருக்கும்.




இன்று சீரான பலன்கள் கிடைக்காது. சவால்களை சந்திக்க வேண்டிய சூழ்நிலை காணப்படும். நீங்கள் பொறுமையுடனும் திறமையுடனும் இதனைக் கையாள வேண்டும். தான தருமங்கள் போன்ற தொண்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் மன அமைதி பெறலாம்.

சக பணியாளர்களுடன் சில அசௌகரியங்களை உணர்வீர்கள். இம்மாதிரியான அற்ப விஷயங்களை தவிர்த்து உங்கள் பணியில் கவனம் செலுத்த வேண்டியது இன்று அவசியம்.

இன்று உங்கள் துணையுடன் பேசாமல் அமைதியாக இருப்பது நல்லது.

இன்று கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். குடும்பத்தில் ஏற்படும் அதிகப்படி செலவுகளை சமாளிக்க கடன் வாங்க நேரலாம்.




இன்று குழப்பங்களும் வருத்தமான மன நிலையும் காணப்படும். இன்றைய நாளை சமாளிக்க நீங்கள் அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

பணியிடத்தில் பணிகள் இறுக்கமாக காணப்படுவதால் நீங்கள் மும்மரமாக பணியில் ஈடுபட்டிருப்பீர்கள். சக பணியாளர்களின் எதிர்ப்பை சந்திப்பீர்கள். இது உங்களுக்கு கவலை அளிக்கும். சிறப்பாக பணியாற்ற பணிகளை திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் பொறுமையின்றி நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே சூடான விவாதங்கள் ஏற்படும். இதனை தவிர்க்க நீங்கள் நட்பான அணுகுமுறை மேற்கொள்ளவேண்டும்.

நிதி வளர்ச்சியில் தடைகள் காணப்படும். கையிலிருக்கும் பணத்தை சேமிக்க வேண்டியது அவசியம்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்காது. பொறுமையுடன் இருந்தால் பல நன்மைகளைக் காணலாம். வெறுமை இருப்பது போன்ற உணர்வு காணப்படும். தியானம் மேற்கொள்வதன் மூலம் இந்த சூழ்நிலையை சமாளித்து அமைதி பெறலாம்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தடைகள் காணப்படும். இன்று நீங்கள் திட்டமிட்டு பணியாற்றுவது மிகவும் அவசியம் .

உங்கள் துணையுடன் சகஜமாக இருக்க வேண்டும். இதனால் உறவில் நல்லிணக்கத்தையும் மகிழ்ச்சியையும் தக்க வைக்க முடியும்.

நிதி விஷயங்களில் விரும்பும் பலன்கள் கிடைக்காது. உங்கள் பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள். எனவே திட்டமிட்டு பணத்தை கையாள வேண்டும்.




